நாள்: 01.12.2025
O.S. No. 83 /2022
பெயர்: மதியழகன், த/பெ. நடராஜன்
வா.சா.1

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**</u>

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் உரிமை கோரி வழக்கு தொடர்ந்துள்ளேன். எனது தாத்தா பெயர் என்னவென்றால் பக்கிரிசாமி. பக்கிரிசாமியின் தாயார் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது. எனது தாயார் பெயர் தமிழரசி. பக்கிரிசாமியின் மனைவியின் பெயர் ரதியம்மாள். எனது தாத்தா பக்கிரிசாமியின் தாயார் பெயரும் ரதியம்மாள் என்றால் சரிதான். எனது பாட்டி ரதியம்மாளை எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நாராயணன், முருகையன் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பக்கிரிசாமியின் தாயாரை தியாகசமுத்திரம் என்ற ஊரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ரதியம்மாள் கணவர் இறந்தவுடன் தியாகசமுத்திரத்திலிருந்து சோத்தக்குடி கிராமத்திற்கு குடிபெயர்ந்தார் என்றால் சரிதான். அவ்வாறு, குடிபெயர்ந்து வந்தவருக்கு தற்காலிகமாக தங்கி கொள்வதற்காக முருகையன், ரத்தியம்மாளுக்கு வழக்கு சொத்தில் ஒரு பகுதியாக 60 அடி நீலமும், 4.4 மீட்டர் அகலமும் கொண்ட நிலத்தை குடியிருப்பதற்காக கொடுத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எவ்வாறு உரிமை கோருகிறேன் என்றால் மூன்று தலைமுறைகளாக அனுபவித்ததன் மூலம் உரிமை கோருகிறேன். எனது தகப்பனார் தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் வழக்கு சொத்தை பொறுத்து எனக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததற்கு மூல பத்திரம் உண்டா என்றால் மூல பத்திரம் இல்லை ஆனால் பட்டா உள்ளது.

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**</u>

M S
BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.12.01 22:52:19 +0530